ராமதாஸ்– அன்புமணி ஆதரவாளர்கள் வாக்குவாதம்; சாலை மறியல்

வந்தவாசி, ஏப். 13: வந்தவாசி அருகே பாமக ராமதாஸ் –அன்புமணி ஆதரவாளர்களிடையே திங்கள்கிழமை வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து ராமதாஸ் ஆதரவாளர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் பாமக அன்புமணி அணி இடம் பெற்றுள்ளது. இந்தக் கூட்டணியில் வந்தவாசி (தனி) தொகுதி அதிமுக வேட்பாளராக பி.ராணி போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக பாமக அன்புமணி அணி ஆதரவாளர்கள் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அனைத்திந்திய ஜனநாயக பாதுகாப்பு கழகம் சார்பில் க.முத்துபெருமாள் வேட்பாளராக போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக பாமக ராமதாஸ் அணி ஆதரவாளர்கள் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வந்தவாசியை அடுத்த மும்முனி கிராமத்தில் ராமதாஸ் அணி ஆதரவாளர்களுடன் க.முத்துபெருமாள் திங்கள்கிழமை பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அங்கு வந்த அன்புமணி அணி ஆதரவாளர்கள் பாமக கொடியை ராமதாஸ் அணி ஆதரவாளர்கள் பயன்படுத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் இரு தரப்புக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், ராமதாஸ் அணி ஆதரவாளர்கள் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவலறிந்து அங்கு வந்த வந்தவாசி தெற்கு போலீஸார் இரு தரப்பினரையும் வந்தவாசி டிஎஸ்பி அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு டிஎஸ்பி சதீஷ்குமார் இரு தரப்பையும் சமரசம் செய்து அனுப்பினார்.

பெரம்பூரில் ரூ.5 கோடி போதைப் பொருள்கள் பறிமுதல்

சென்னை, ஏப். 13: பெரம்பூர் ரயில் நிலையத்தில் பெங்களூர் விரைவு ரயிலில் ரூ.5 கோடி மதிப்புள்ள போதைப் பொருள்களை ரயில்வே பாதுகாப்புப் படையினர் திங்கள்கிழமை கைப்பற்றி விசாரித்து வருகின்றனர்.

சென்னையில் அனைத்து ரயில் நிலையங்களிலும் ரயில்வே பாதுகாப்புப் படையினர் சிறப்பு தேர்தல் குழுவை அமைத்து இரவு பகலாகக் கண்காணித்து வருகின்றனர். அதன்படி, சென்னை சென்ட்ரல், எழும்பூர் ஆகிய ரயில் நிலையங்களில் பணம், தங்கம், வெள்ளிப் பொருள்கள் மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், சென்னை மூர் மார்க்கெட் காம்ப்ளக்ஸ் நிலைய ரயில்வே பாதுகாப்புப் படையின் ஆய்வாளர் அருண் தலைமையில் சிறப்புக் குழுவினர் திங்கள்கிழமை பெரம்பூர் ரயில் நிலையத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தபோது, கர்நாடக மாநிலம், பெங்களூரில் இருந்து வந்த விரைவு ரயிலில் பொதுப் பெட்டியில் கேட்பாரற்று அலுமினிய சூட்கேஸ் கிடப்பது தெரிய வந்தது. அதைக் கைப்பற்றிய ரயில்வே பாதுகாப்புப் படையினர் திறந்த பார்த்தபோது, 'ஹைட்ரோ போனிக் கன்னாபிஸ்' எனும் போதைப் பொருள் பாக்கெட்டுகளில் மொத்தம் 5 கிலோவாக அடைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. அவற்றின் மதிப்பு ரூ.5 கோடி எனக் கூறப்படுகிறது.

போதைப் பொருளைக் கைப்பற்றிய ரயில்வே பாதுகாப்புப் படையினர் அதை போதைத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர். ரயில் நிலையக் கண்காணிப்பு கேமரா காட்சிகள் மூலம் பொதுப் பெட்டியில் போதைப் பொருள் சூட்கேசை விட்டுச் சென்றவரை அடையாளம் காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

தஞ்சை பெரிய கோயிலில் சித்திரைப் பெருவிழா தொடக்கம்

ஏப். 27–இல் தேரோட்டம்

தஞ்சாவூர், ஏப். 13: தஞ்சாவூர் பெரிய கோயிலில் சித்திரைப் பெருவிழா கொடியேற்றத்துடன் திங்கள்கிழமை தொடங்கியது.

இதை முன்னிட்டு, கோயில் வளாகத்தில் ஸ்ரீசந்திரசேகரர் பஞ்ச மூர்த்திகளுடன் புறப்பாடு நடைபெற்றது. பின்னர், கொடி மரத்துக்கு அபிஷேகம் செய்யப்பட்டு, மேள, தாள முழக்கத்துடன் கொடி ஏற்றப்பட்டது. இதில், திரளான பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து ஏப்ரல் 30–ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இந்த விழாவில் நாள்தோறும் காலையில் பல்லக்கு, மாலையில் சிம்மம், மேஷம், வெள்ளி மயில், சந்திர பிரபை உள்பட பல்வேறு வாகனங்களில் சுவாமி புறப்பாடு, கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெறவுள்ளன. இந்த விழாவின் முதன்மை வைபவமான தேரோட்டம் ஏப்ரல் 27 –ஆம் தேதி தேதி நடைபெறவுள்ளது. இதில், தேர் நான்கு ராஜ வீதிகளிலும் வலம் செல்லவுள்ளது. நிறைவு நாளான ஏப்ரல் 30–ஆம் தேதி தியாகராஜர் ருத்திர பாத தரிசனத்துடன் யதாஸ்தான பிரவேசம், நடராஜர் நான்கு ராஜ வீதிகளில் புறப்பாடு, சிவகங்கை குளத்தில் தீர்த்தவாரி, மாலையில் கொடியிறக்கம் ஆகியவை நடைபெறவுள்ளன.

தஞ்சாவூர் பெரிய கோயிலில் சித்திரைப் பெருவிழா தொடக்கமாக திங்கள்கிழமை நடைபெற்ற கொடியேற்றம்.

திருப்பூரில் விஜய் இன்று பிரசாரம்

அவிநாசி, ஏப்.13: திருப்பூர் மாவட்டத்தில் போட்டியிடும் தவெக வேட்பாளர்களை ஆதரித்து, அக்கட்சியின் தலைவர் விஜய் செவ்வாய்க்கிழமை மாலை பிரசாரம் மேற்கொள்கிறார்.

முன்னதாக செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் கோவை விமான நிலையத்துக்கு வருகிறார். அங்கிருந்து கொச்சி–சேலம் 6 வழிச் சாலை வழியாக அவிநாசி செல்கிறார்.

அதைத்தொடர்ந்து தமிழக வெற்றிக் கழகம் சார்பில் திருப்பூர் மாவட்டத்தில் போட்டியிடும் தவெக வேட்பாளர்களை ஆதரித்து, அவிநாசி புதிய பேருந்து நிலையம் அருகே அக்கட்சியின் தலைவர் விஜய் செவ்வாய்க்கிழமை மாலை பிரசாரம் (சாலை வலம்) செய்கிறார். அதைத்தொடர்ந்து பெருமாநல்லூர் நான்கு வழிச்சாலை சந்திப்பில் திருப்பூர் மாவட்டத்தில் போட்டியிடும் தவெக வேட்பாளர்களை அறிமுகம் செய்து பேசுகிறார்.

பின்னர் திருப்பூர்–பூலுவபட்டி வரை சாலை வலம் மேற்கொள்ள உள்ளார். இதையொட்டி, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அவிநாசி பகுதியில் ஆய்வு மேற்கொண்டார். ஏற்கெனவே தருமபுரியில் நடைபெற இருந்த தவெக தலைவர் விஜய்யின் சாலை வலம் ரத்து செய்யப்பட்டதையடுத்து, அவிநாசியில் நிகழ்ச்சி நடைபெற தவெக சார்பில் அனுமதி கோரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பொள்ளாச்சி அருகே பெண்ணைத் தாக்கியதாக திமுகவினர் மீது புகார்

பொள்ளாச்சி, ஏப்.13: கோவை மாவட்டம், பொள்ளாச்சி அருகே வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது, வீட்டில் ஸ்டிக்கர் ஒட்டுவது தொடர்பாக திமுகவினர் பெண்ணைத் தாக்கியதாக புகார் எழுந்துள்ளது.

தேர்தலுக்கு 10 நாள்களே உள்ள நிலையில் வீடுவீடாக சென்று வாக்கு சேகரிப்பது, கட்சிகளின் ஸ்டிக்கர் ஒட்டுவது என தீவிர பிரசாரத்தில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், கிணத்துக்கடவை அடுத்த நல்லட்டிபாளையம் பகுதியில் திமுகவினர் ஞாயிற்றுக்கிழமை இரவு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு நாகேஸ்வரி என்பவரது வீட்டில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதில் அவரது வீட்டு சுவரில் ஸ்டிக்கர் ஒட்ட முயன்றுள்ளனர். ஸ்டிக்கர் ஒட்ட அவர் எதிர்ப்பு தெரிவித்து, நாங்கள் வாடகைக்கு குடியிருக்கும் வீடு எனவும், ஸ்டிக்கர் ஒட்ட வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இதில் வாக்குவாதம் ஏற்பட்டு வாக்கு சேகரிக்க வந்த நபர்கள் நாகேஸ்வரியையும், அவரது கணவர் பிரதீப்பையும் தாக்கியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் நாகேஸ்வரி புகார் அளித்துள்ளார். மேலும், காயமடைந்த அவர் கிணத்துக்கடவு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

இந்த சம்பவம் குறித்து அறிந்த தவெக தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது குறித்து கிணத்துக்கடவு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் அந்தப் பெண் தான் கைக்குழந்தையுடன் இருந்தபோது தாக்கியதாகத் தெரிவிக்கும் அவரது விடியோ சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.

பள்ளி வளாகத்தில் ஆசிரியை வெட்டிக் கொலை; குழந்தையைக் கொன்று கணவர் தற்கொலை

ஓமலூர், ஏப். 13: சேலம் மாவட்டம், ஓமலூர் அருகே அரசுப் பள்ளி வளாகத்தில் பெண் ஆசிரியரை வெட்டிக் கொலை செய்த அவரது கணவர், 5 வயது பெண் குழந்தையையும் கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்து கொண்டார்.

ஓமலூரை அடுத்த பாலிக்கடை பகுதியைச் சேர்ந்தவர் ஸ்ரீவித்யா (45). இவர், காமலாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் கடந்த 25 ஆண்டுகளாக ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார். இவர் திங்கள்கிழமை மதிய உணவு இடைவேளையின்போது, தனது 5 வயது பெண் குழந்தை அசோக சிவ காமசுந்தரியுடன் பள்ளி வளாகத்தில் அமர்ந்து உணவு அருந்திக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த அவரது கணவர் விஜயமுருகன் (46), தான் மறைத்துவைத்திருந்த அரிவாளால் ஸ்ரீவித்யாவை சரமாரியாக வெட்டினார். இதில் பலத்த காயம் அடைந்த ஸ்ரீவித்யா அதே இடத்தில் உயிரிழந்தார்.

இதைக் கண்டு அங்கிருந்த மாணவ, மாணவிகள் அலறியடித்து ஓடினர். சக ஆசிரியர்கள் ஓடி வந்து விஜயமுருகனை பிடிக்க முயன்றனர். ஆனால், விஜயமுருகன் தன்னுடைய குழந்தையை தூக்கிக் கொண்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். பள்ளியில் இருந்து சிறிது தொலைவுக்கு சென்ற விஜயமுருகன், குழந்தைக்கு விஷம் கொடுத்து விட்டு தானும் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

ஆசிரியை ஸ்ரீவித்யா, குழந்தை அசோக சிவகாமசுந்தரியுடன் விஜயமுருகன்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ஓமலூர் டி.எஸ்.பி. சஞ்சீவ்குமார் மற்றும் போலீஸார், ஸ்ரீவித்யாவின் உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

போலீஸாரின் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாவது:

தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தைச் சேர்ந்த விஜயமுருகனுக்கு ஏற்கெனவே திருமணமாகி விவாகரத்தான நிலையில், 10 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீவித்யாவை 2–ஆவதாக திருமணம் செய்துள்ளார். விஜயமுருகன் எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்துள்ளார். இதனால், தம்பதிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக ஸ்ரீவித்யாவின் நடத்தையில் சந்தேகப்பட்டு அவரை விஜயமுருகன் துன்புறுத்தி வந்துள்ளார்.

மேலும், கொலை செய்துவிடுவேன் என விஜயமுருகன் மிரட்டியதால், பயந்துபோன ஸ்ரீவித்யா, இதுகுறித்து தொளசம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இந்நிலையில் பள்ளிக்குள் புகுந்து ஸ்ரீ வித்யாவை வெட்டிக் கொலை செய்த விஜயமுருகன், குழந்தையை தூக்கிச் சென்று விஷம் கொடுத்து கொன்றுவிட்டு, தானும் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டார். பள்ளிக்கு பின்புறம் சுமார் அரை கி.மீ. தொலைவில் நடந்த இச்சம்பவம் உடனடியாக யாருக்கும் தெரியவில்லை.

கனரா வங்கி Canara Bank
இந்திய அரசு உடமையாக்கப்பட்டது
A Government of India Undertaking
சிண்டிகேட் Syndicate

கருமத்தம்பட்டி கிளை :
சர்வே எண்.282/1, நித்திலன் ஆர்கேட், கதவு எண்.153 A 1&2, சோமனூர் பெயின் ரோடு, கருமத்தம்பட்டி – 641 668.
போன் : 94890 43532, மின்னஞ்சல் : cb3437@canarabank.com

சுவாதீன அறிவிப்பு

[பிரிவு 13(4)] (அசையும் / அசையாச் சொத்திற்காக)

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002ன் (Securitisation & Reconstruction of Financial Assets & Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவராக கீழே கையொப்பமிட்ட **கனரா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம் மேற்படி சட்டம் மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 பிரிவு 13(2) விதி 3ன் படி, **30.01.2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிட்ட கடன் தொகையான **ரூ.33,28,884/– (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து இருபத்து எட்டாயிரத்து எண்ணூற்று எண்பத்து நான்கு மட்டும்)** மற்றும் செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் அறிவிப்பு பெற்றதேதியிலிருந்து அறுபதுநாட்களுக்குள்திரும்பச் செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர்/சொத்தின் உரிமையாளர் : M/s. ஸ்ரீ ஈஸ்வரி ஸ்பின்னர்ஸ்,** எண்.131, எல்லக்காதோட்டம், குளத்துப்பாளையம், கிட்டாம்பாளையம் அஞ்சல், கருமத்தம்பட்டி, கோயம்புத்தூர் – 641 659, **திரு. K.சண்முகம் (பங்குதாரர் : M/s. ஸ்ரீ ஈஸ்வரி ஸ்பின்னர்ஸ்),** த/பெ கருப்பண்ண கவுண்டர், எண்.1/13, எல்லக்காதோட்டம், குளத்துப்பாளையம், கிட்டாம்பாளையம் அஞ்சல், கருமத்தம்பட்டி, கோயம்புத்தூர் – 641 659. **திரு. சரத்குமார் S (பங்குதாரர் : M/s. ஸ்ரீ ஈஸ்வரி ஸ்பின்னர்ஸ்),** த/பெ. K.சண்முகம், எண்.1/13, எல்லக்காதோட்டம், குளத்துப்பாளையம், கிட்டாம்பாளையம் அஞ்சல், கருமத்தம்பட்டி, கோயம்புத்தூர் – 641 659, **திருமதி. ஜானகி S (அடமானதாரர் : M/s. ஸ்ரீ ஈஸ்வரி ஸ்பின்னர்ஸ்),** க/பெ. K.சண்முகம், எண்.1/13, எல்லக்காதோட்டம், குளத்துப்பாளையம், கிட்டாம்பாளையம் அஞ்சல், கருமத்தம்பட்டி, கோயம்புத்தூர் – 641 659 என்பவர்களுக்கு அனுப்பப்பட்டது.

கடன்தாரர் வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால் குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் 13(4) பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8 மற்றும் 9வது விதிகளின் படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **10.04.2026** தேதியில் கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.

இதுமுதற்கொண்டு கடன்தாரரோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்தச் சொத்துக்களில் எந்தவித வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **கனரா வங்கிக்கு** வந்து சேரவேண்டிய கடன் தொகை **ரூ.35,50,046/– (ரூபாய் முப்பத்து ஐந்து லட்சத்து ஐம்பதாயிரத்து நாற்பத்து ஆறு மட்டும்) 31.03.2026 தேதி அன்று** மற்றும் பின்வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து வசூலிக்கப்படும் என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையும் / அசையாச் சொத்து விபரம்

1. அசையும் சொத்து : M/s. ஸ்ரீ ஈஸ்வரி ஸ்பின்னர்ஸ், எண்.131, எல்லக்காதோட்டம், குளத்துப்பாளையம், கிட்டாம்பாளையம் அஞ்சல், கருமத்தம்பட்டி, கோயம்புத்தூர் – 641 659 விலாசத்திலுள்ள நிறுவனத்தின் வளாகத்தில் உள்ள ஆலை மற்றும் இயந்திரங்களின் பிணையம், பிற அசையும் சொத்து, பொருத்தியவைகள், பிட்டிங்குகள் உள்ளிட்டு.

2. அசையாச் சொத்து : சொத்தின் உரிமையாளர் பெயர் : திருமதி.ஜானகி S. இனம் எண்.1 : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அன்னூர் சார் பதிவு மாவட்டம், முந்தைய பல்லடம் தாலூகா, தற்போது சூலூர் தாலூகா, கிட்டாம்பாளையம் கிராமம், சர்வே எண்.131ல் உள்ள 5.25 ஏக்கர் தரம் ரூ.7.19, இதில் பாதைக்கென்று விடப்பட்ட 0.29 ஏக்கர் போக, மீதமுள்ள பரப்பு 4.96 ஏக்கர், இதில் ஆவண எண்.206/1991 ன்படி 2.22 ஏக்கருக்கு **எல்லைகளும், அளவுகளும் வருமாறு :** முன்னர் உப்பிலிபாளையம் கிராமம், ரங்கப்ப கவுண்டருக்குச் சொந்தமான சொத்து. தற்போது ஜானகிக்குச் சொந்தமான சொத்துக்கு வடக்கு, சர்வே எண்.131 ல் கிழமுறமுள்ள பார்த்தியனுக்குச் சொந்தமான சொத்துக்கு மேற்கு, கிழமேல் ரோட்டுக்கு மற்றும் ரத்தினசிகாமணி மற்றும் பிறரது விவசாய பண்ணை வீட்டுக்குத் தெற்கு, சர்வே எண்.133 சொத்துக்குக் கிழக்கு. இதன் மத்தியில் உள்ள 1.71 ஏக்கர், மேற்படி சொத்துக்கு சர்வே எண்.131 ல் உள்ள கிழமேல் ரோட்டிலிருந்து தென்புறக் கடைசி, கிழமேல் மற்றும் தென்வடல் பொது வண்டித் தடம் வழித்தட உரிமை மற்றும் அங்குள்ள அனைத்துப் பாத்தியதைகளுடன். **இனம்–2 :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அன்னூர் சார் பதிவு மாவட்டம், முந்தைய பல்லடம் தாலூகா, தற்போது சூலூர் தாலூகா, கிட்டாம்பாளையம் கிராமம், சர்வே எண்.131ல் உள்ள 5.25 ஏக்கர் தரம் ரூ.7.19, இதில் பாதைக்கென்று விடப்பட்ட 0.29 ஏக்கர் போக, மீதமுள்ள பரப்பு 4.96 ஏக்கர், இதில் ஆவண எண்.206/1991ன்படி 2.22 ஏக்கர் தென்புற பகுதிக்கு **எல்லைகளும், அளவுகளும் வருமாறு :** கிழமேல் வழித்தடத்துக்கு வடக்கு, பார்த்திபனுக்குச் சொந்தமான 1.46 ஏக்கர் சொத்துக்கு மேற்கு, கிழமேல் வழித்தடத்துக்குத் தெற்கு, தென்வடல் வழித்தடத்துக்குக் கிழக்கு. இதன் மத்தியில் உள்ள 0.40 ¾ ஏக்கர், இச்சொத்தில் உள்ள தெற்குப் பார்த்த மங்களூர் ஒட்டுக் கூரை வீட்டுடன், அங்குள்ள அனைத்துப் பாத்தியதைகளுடன். மின்சார இணைப்பு எண்.45, 110, காப்புத் தொகைகளுடன் மற்றும் மேற்படி சொத்திலுள்ள விவசாய பண்ணை வீடு, அங்குள்ள அனைத்துப் பாத்தியதைகளுடன். பண்ணை வீட்டின் கதவு எண்.1/13, மின்சார இணைப்பு எண்.21. மேற்படி சொத்துக்கு சர்வே எண்.131ல் உள்ள கிழமேல் ரோட்டிலிருந்து தென்புறக் கடைசி, கிழமேல் மற்றும் தென்வடல் பொது வண்டித் தடம் வழி உரிமை மற்றும் அங்குள்ள அனைத்துப் பாத்தியதைகளுடன்.

தேதி : 10.04.2026 **அதிகாரபூர்வ அதிகாரி**
இடம் : கோயம்புத்தூர் **கனரா வங்கி**

கனரா வங்கி Canara Bank
இந்திய அரசு உடமையாக்கப்பட்டது
A Government of India Undertaking
சிண்டிகேட் Syndicate

பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் மின்-ஏல விற்பனை அறிவிப்பு

பிராந்திய அலுவலகம் - I, கோயம்புத்தூர்.எண்.166, TVS ரோடு, R.S புரம், கோயம்புத்தூர் – 641002,
போன் : 94890 43387. மின்னஞ்சல் : legalrocbr@canarabank.com

இதனால் பொதுவாகப் பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோருக்குத் தெரிவித்துக் கொள்வது என்னவெனில் கீழே குறிப்பிட்டுள்ளதும், **சம்பந்தப்பட்ட கிளை, கனரா வங்கிக்கு** அடமானப்படுத்தப்பட்டுள்ளதுமான வாகனங்கள் / அசையும் சொத்துக்கள் ஆன்லைன் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதாகும்.

இவ்வசையும் சொத்துகள் **"எங்குள்ளதோ அங்கு", "என்ன உள்ளதோ அது" மற்றும் "திரும்பப்பெற இயலாத நிலையில்" மற்றும் "புகார் எழாத வண்ணம்"** என்ற அடிப்படையில் எந்த விதமான உத்தரவாதமோ அல்லது உறுதிமொழியோ அற்றநிலையில் விற்பனை செய்யப்பட உள்ளது.

கனரா வங்கிக்குச் செலுத்த வேண்டியுள்ள நிலுவைகளுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேதி : 30.04.2026 அன்று, காலை 10.30 மணி
ஏலத் தேதி மற்றும் நேரம் : 30.04.2026 காலை 11.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை, மின்–ஏலம் சேவையாளர் : M/s. PSB Alliance Baanknet
ஏலக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடம் : கடன்வசூல் பிரிவு, பிராந்திய அலுவலகம்–1, ஆனந்தா ஸ்வீட்ஸ் எதிரில், 166, டி.வி.சாமி ரோடு, ஆர்.எஸ்.புரம் மேற்கு, கோயம்புத்தூர் – 641 002.

நிர்ணயிக்கப்பட்ட விலையின் 10% டேவணித் தொகையை M/s. PSB அல்லையன்ஸ் பிரைவேட் லிமிடெட் (BAANKNET) போர்டலின் இ–வாலட்டில் நேரடியாக டெபாசிட் செய்ய வேண்டும். அல்லது டேவணித் தொகையை RTGS/NEFT வாயிலாக டெபாசிட் செய்ய சலான் உருவாக்கி, அதில் கணக்கு விபரங்களைக் குறிப்பிட்டு டெபாசிட் செய்ய வேண்டும்.

சொத்து விபரம் மற்றும் ரிசர்வ் விலை மற்றும் முன்வைப்புத் தொகை :

வ. எண்.	கடன்தாரர்களின் பெயர், முகவரி மற்றும் கணக்கு எண்.	கிளை	தயாரிப்பு / மாடல்	வாகன எண்.	நிர்ணய விலை மற்றும் EMD
1.	**திரு.மணிகண்டன் சேகர்,** த/பெ.சேகர், 1/14, வெங்கட்ரமணா நகர், பேர்த்தனூர், கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641023 **கடன் எண்.170006141730**	குனியமுத்தூர் (16124) மொபைல் : 94422 03555	PIAGGIO APE CITY + DIESEL 2022	TN 99 X 4726	ரூ.1,22,000/- ரூ.12,200/- (நிர்ணய விலையில் 10%)
2.	**திரு. சஞ்ஜீவன் ராமசாமி,** த/பெ. ராமசாமி, 19, லட்சுமிபுரம் 6, ஆண்டாள் வீதி 2, மீனாட்சி நகர், கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641 004. **கடன் எண்.170006564412**	ராம் நகர் (16134) மொபைல் : 94422 03565	PIAGGIO APE CITY CNG 2022	TN 37 DP 7686	ரூ.98,000/- ரூ.9,800/- (நிர்ணய விலையில் 10%)
3.	**திருமதி.பவித்ரா. G,** க/பெ. கிருஷ்ணகுமார், 61/7, CMC காலனி, காமராஜபுரம், RS புரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641 002. **கடன் எண்.170007126068**	கணபதி – II (16140) மொபைல் : 94422 03571	PIAGGIO APE AUTO DX	TN 66 AM 0715	ரூ.1,98,000/- ரூ.19,800/- (நிர்ணய விலையில் 10%)
4.	**திருமதி.ஸ்ரீதேவி. N,** க/பெ. ஸ்ரீநிவாஸ். K.C, எண்.179A, 3வது வீதி, சிவசக்தி நகர், சிவானந்தபுரம், சரவணம்பட்டி, கோயம்புத்தூர் – 641 035 **கடன் எண்.170007118265**	கணபதி II (16140) மொபைல் : 94422 03571,	PIAGGIO APE CITY + DX	TN 38 DD 3881	ரூ.1,17,000/- ரூ.11,700/- (நிர்ணய விலையில் 10%)
5.	**திருமதி.சசிகலா. R,** C. ராமலிங்கம், 37, லால்பகதூர் சாஸ்திரி வீதி, கோவில்மேடு, கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641 025. **கடன் எண்.170005363909**	கணபதி – II (16140) மொபைல் : 94422 03571	PIAGGIO APE CITY CNG	TN 38 DB 7150	ரூ.1,32,000/- ரூ.13,200/- (நிர்ணய விலையில் 10%)
6.	**திரு.பிரபு கார்த்திராஜ்.** C/o. கார்த்திராஜ், வீட்டு எண்.987, ராஜ"நாயுடு லேயவுட், கார்த்திபுரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641 012. **கடன் எண்.170006175778**	கணபதி – II (16140) மொபைல் : 94422 03571	PIAGGIO APE AUTO DX	TN 66 AL 1732	ரூ.1,64,000/- ரூ.16,400/- (நிர்ணய விலையில் 10%)
7.	**திரு.யோகராஜ். T,** த/பெ.தம்புராஜ், 3, பட்டாளம்மன் கோவில் வீதி, மீனாட்சி நகர், கோயம்புத்தூர், தமிழ்நாடு – 641 004 **கடன் எண்.170005363980**	குனியமுத்தூர் (16124) மொபைல் : 94422 03555	PIAGGIO APE CITY + DIESEL 2022	TN 37 DM 8995	ரூ.90,000/- ரூ.9,000/- (நிர்ணய விலையில் 10%)

விற்பனை தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு தயவு செய்து கனரா வங்கியின் https://baanknet.com/ என்ற இணையதளத்தின் "E-Auction" என்ற இணைப்பைக் காணவும் அல்லது கனரா வங்கியின் கோயம்புத்தூர்–I, பிராந்திய அலுவலகத்தின் வசூல் மற்றும் சட்டப்பிரிவை (94890 43387) எந்த ஒரு வேலை நாளிலும் அலுவலக வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

மின்–ஏல விதிகளும் நிபந்தனைகளும் :

1. ஏலம் / ஏல நடைமுறைகள் **https://baanknet.com/** என்ற இணையதளத்தில் "ஆன்லைன் மின் நுட்பவழியில்" மட்டுமே நடைபெறும்; **2.** ஏலத் தேதி மற்றும் நேரம் : **30.04.2026 அன்று காலை 11.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை; 3.** ஏல வைப்புத் தொகை செலுத்தல் மற்றும் ஏலக்குறிப்பீட்டு சமர்ப்பிக்க இறுதி நாள் : **30.04.2026 அன்று காலை 10.30 மணி அல்லது அதற்கு முன்னர்; 4.** முன் அனுமதியுடன் வாகனங்களைப் பார்வையிடும் நாள் : **28.04.2026 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5 மணி வரை ; 5.** ஏலம்கோர உள்ள ஏலதாரர்கள் ஏலப்படிவ நகல் ஒன்றுடன் கீழ்குறிப்பிட்ட நகல் ஆவணங்கள் / விபரங்கள் சேர்த்து **30.04.2026 அன்று காலை 10.30 மணி**க்குள் சமர்ப்பிக்க வேண்டும். அவை நிரந்தரக்கணக்கு எண் அட்டை (Pan Card)யின் சுய ஒப்பமிட்ட ஒளி நகல்கள், அடையாளச் சான்று, முகவரிச்சான்று ஆகியன. ஆயினும் வெற்றிபெற்ற ஏலதாரர் (வாங்குவதற்கான மீதத் தொகை) விற்பனைக்குக் குறிப்பிட்ட தொகை செலுத்தும்போது மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் அசல் சான்றினை வங்கி பரிசீலிப்பதற்கென சமர்ப்பிக்க வேண்டும்; **6.** இந்த மின்–ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது குறைந்தபட்ச வைப்புத் தொகையினை மேலே அட்டவணையில் குறிப்பிட்ட கிளையின் கணக்கில் RTGS/NEFT முறையில் செலுத்திவிட வேண்டும். ஏலதாரரின் பெயர், தொடர்பு எண், முகவரி, மின்னஞ்சல் அடையாள விவரம் மற்றும் ஏலதாரர் கணக்கு விவரம் ஆகிய விவரங்கள் குறைந்தபட